# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## EXTERNAL DEGREE PROGRAMME – 1999/ 2000
## PART - II EXAMINATION IN BUSINESS ADMINISTRATION/ COMMERCE 1999/ 2000
## (APRIL/ MAY 2006)
## COM 305 CAPITAL MARKET AND FINANCIAL INSTITUTIONS

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ. வியாபார வங்கியின் (Merchant Bank) பிரதான தொழிற்பாடுகள் எவை?
(04 புள்ளிகள்)

ஆ. வியாபார வங்கியை வணிக வங்கி ஒன்றிலிருந்து வேறுபடுத்துக.
(04 புள்ளிகள்)

இ. இலங்கையில் செயற்படும் வியாபார வங்கிகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

ஈ. வணிக வங்கிகளினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆற்றப்படும் பங்களிப்பைச் சுருக்கமாக விபரிக்குக.
(05 புள்ளிகள்)

உ. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இலங்கையின் வங்கித் துறைச் செயற்பாட்டில் உண்டான சாதகமான விளைவுகளை ஆராய்க.
(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

02. அ. மூலதனச் சந்தையின் பொருளாதார முக்கியத்துவத்தை ஆராய்க.
(05 புள்ளிகள்)

ஆ. மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

இ. மூலதனச் சந்தை எவ்வாறு தொழிற்படுகின்றது? இச் செயற்பாட்டில் பங்குபற்றும் பிரதான நிதி நிறுவனங்கள் எவை?
(05 புள்ளிகள்)

ஈ. காப்புறுதிக் கம்பனிகள் எவ்வாறு ஒரு நிதி நடுவராகச் செயற்படுகின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03\. அ. பின்வருவனவற்றை வேறுபடுத்துக.

(i) காப்புறுதிக் கம்பனிகளும் (Insurance Companies) நிதிக் கம்பனிகளும் (Finance Companies)

(ii) குறித்துரைக்கப்பட்ட இடரும் (Specific Risk) சந்தை இடரும் (Market Risk)

(iii) பங்குச் சந்தையும் (Share Market) முறிச் சந்தையும் (Bond Market)

(03 x 04 = 12 புள்ளிகள்)

ஆ. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வியாபாரத் தளம் (Trading Floor)

(ii) யூரோ சந்தை (Euro Market)

(iii) கரை கடந்த வங்கிச் சந்தை (Off shore Market)

(iv) புளுசிப் கம்பனிகள் (Blue ship Companies)

(04 x 02 = 08 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

04\. அ. மத்திய வைப்பகத் திட்டம் (Central Depository System) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? பங்குச் சந்தையில் அதன் பாத்திரம் என்ன?

(05 புள்ளிகள்)

ஆ. மத்திய வங்கியால் வணிக வங்கிகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(05 புள்ளிகள்)

இ. மத்திய வங்கியானது அண்மைக் காலமாக தனது செயற்பாட்டை வினைத் திறனாக செயற்படுத்துவதற்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஆராய்க.

(05 புள்ளிகள்)

ஈ. அரசாங்கத்தின் பணக் கொள்கையை அமுல்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் பங்கு யாது?

(05 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

05\. அ. அலகுப் பொறுப்பாட்சி (Unit Trust) என்பதனை வரையறுக்குக. சிறிய சேமிப்பாளர்களை ஈர்ப்பதற்கு இவ் வகையான முதலீடுகள் கொண்டிருக்கும் விசேட அம்சங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ. பங்குப் பரிவர்த்தனை ஒன்றின் பிரதான தொழிற்பாடுகளை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

இ. இலங்கை நிதிச் சந்தையானது ஒரு சர்வதேச அல்லது பிராந்திய நிதி நிலையமாக உருவாகுவதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்க.

(05 புள்ளிகள்)

ஈ. இலங்கையில் செயற்பட்டுவரும் அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

06. ABC கம்பனியானது 1995 ஜனவரி 1 ல் புதிய முறி ஒன்றை வழங்கியது. அம் முறிகள் ஒவ்வொன்றும் அதன் முகப் பெறுமதியில் விற்கப்பட்டதுடன் (1,000/-) 15% கூப்பன் வட்டி வீதத்தையும் கொண்டதாகும். மேலும் அவை 31.12.2014 இல் முதிர்வடையும் 20 வருட முதிர்வு காலத்தைக் கொண்டதாகும். கூப்பன் கொடுப்பனவுகள் அரையாண்டு அடிப்படையில் செலுத்தப்படும். (யூன் 30 இலும் டிசம்பர் 31 இலும்)

அ. 1995.01.01 ல் ABC கம்பனியின் முறியின் "முதிர்வு வரை விளைவு" என்ன? (YTM)

(04 புள்ளிகள்)

ஆ. 2000.01.01 ல் வட்டி வீதம் 12% மாக வீழ்ச்சியடைந்தது எனக் கருதின் அத் திகதியில் முறியின் விலை என்ன?

(04 புள்ளிகள்)

இ. மேலே (ஆ) ல் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் 2000.01.01 ல் முறி மீதான நடைமுறை விளைவையும் மூலதன இலாப விளைவையும் காண்க.

(04 புள்ளிகள்)

ஈ. 2008.07.01 ல் முறிகள் 879.65/-க்கு விற்கப்படுமாக இருந்தால் அத்திகதியில் "முதிர்வு வரை விளைவு" எவ்வளவு?

(04 புள்ளிகள்)

உ. 2008.07.01 ல் நடைமுறை விளைவும் மூலதன இலாப விளைவும் எவ்வளவு?

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

07. அ. முதலீட்டு இடர் என்பதால் நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?

(03 புள்ளிகள்)

ஆ. பங்குகள் X உம் Y உம் பின்வரும் சாத்திய வருவாய்களின் நிகழ்தகவு பரம்பலைக் கொண்டுள்ளன.

| நிகழ்தகவு | பங்கு X (%) | பங்கு Y (%) |
|---|---|---|
| 0.1 | - 10 | - 35 |
| 0.2 | 2 | 0 |
| 0.4 | 12 | 20 |
| 0.2 | 20 | 25 |
| 0.1 | 38 | 45 |

(i) ஒவ்வொரு பங்கினதும் எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதத்தைக் கணிக்குக.

(03 புள்ளிகள்)

(ii) ஒவ்வொரு பங்கினதும் நியம விலகலைக் கணிக்குக.

(05 புள்ளிகள்)

(iii) ஒவ்வொரு பங்கினதும் மாறல் குணகத்தைக் (Co-efficient of variation) கணிக்குக.

(03 புள்ளிகள்)

(iv) இவ்விரு பங்குகளில் இடர் குறைந்த பங்கு தொடர்பாக உமது கருத்து யாது?

(03 புள்ளிகள்)

இ. முதலீடு ஒன்றின் இடருக்கும் அதன் வருவாய் வீதத்திற்கும் இடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

08. அ. M, N ஆகிய இரண்டு பிணைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பொருளாதார நிலை | நிகழ்தகவு (Pi) | சாத்தியமான வருவாய் வீதம் (Ki) M | N |
|---|---|---|---|
| A | 0.2 | - 4 | 10 |
| B | 0.1 | 8 | - 2 |
| C | 0.2 | 12 | 10 |
| D | 0.4 | 6 | 17 |
| E | 0.1 | - 12 | 28 |

பட்டியல் முதலீட்டின் நியம விலகலைக் கணிக்குக. ($\sigma P_{MN}$)

(08 புள்ளிகள்)

ஆ. உமக்கு Y கம்பனியின் பிணைகள் மற்றும் பிணைகள் சந்தை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொருளாதார நிலை | (Pi) | Y இனுடைய வருவாய் வீதம் | சந்தை வருவாய் வீதம் |
|---|---|---|---|
| A | 0.2 | - 15 | - 13 |
| B | 0.4 | 10 | 6 |
| C | 0.2 | 7 | 5 |
| D | 0.1 | 4 | 7 |
| E | 0.1 | - 2 | - 1 |

Y கம்பனியுடைய பீற்றாக் (β) குணகத்தைக் கணிக்குக.

(12 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**